மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், திருச்சி மின் பகிர்மான வட்டத்தில்தான் தொடர்ந்து செயல்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த அச்சம் தேவையில்லை. திருச்சிக்கு மிக அருகில் இருக்கக்கூடிய மற்ற பகுதிகளையும் ஒருங்கிணைத்து மூன்று புதிய மண்டலங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அதனடிப்படையில், அதிக அல்லது குறைந்த எண்ணிக்கையிலிருக்கின்ற மின் இணைப்புகளைச் சரி செய்து புதிய வட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆனால், பெரம்பலூரைப் பொறுத்தவரை, திருச்சி மண்டல அலுவலகத்தில்தான் தொடர்ந்து செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

ஆரம்ப சுகாதார நிலையம்

***10235—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், புலிவலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2022 ஏப்ரல் 12]

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் ஒன்றியம், புலிவலம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். புலிவலத்தைப் பொறுத்தவரை, அங்கிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் அடியக்கமங்கலம் என்கின்ற பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. புலிவலத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் விஜயபுரம் என்கின்ற பகுதியில் ஓர் அரசு மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. புலிவலத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்றால், 30,000 மக்கள்தொகை இருக்க வேண்டும் மற்றும் 8 கிலோ மீட்டர் இடைவெளி இருத்தல் வேண்டும் என்கின்ற ஒன்றிய அரசின் வரையறைகள் இருக்கின்றன. எனவே, புலிவலத்தில் இப்போது புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.

திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர், மாண்புமிகு தளபதி அவர்களின் மாவட்டமான திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ளடங்கிய புலிவலம் ஊராட்சி, திருவாரூர் மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஊராட்சி என்பதைப் பதிவு செய்கிறேன். அந்த ஊராட்சிப் பகுதி 15,000–க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பகுதி. நகரப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நகரத்திலேயே நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுவது பற்றி நாம் அனைவரும் அறிந்ததே. எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அடுத்த ஆண்டிலாவது அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2022 ஏப்ரல் 12

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே தெரியும். 2019 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ஆம் தேதி அன்று இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகம் முழுவதிலும் இருக்கிற 12,525 ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்களை நடத்தினார்கள். அப்படி கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டபோது, புலிவலத்தில்தான் முதல் கூட்டம் நடத்தப்பட்டது. இன்றைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் 10,000–க்கும் மேற்பட்ட மகளிர் கலந்துகொண்டனர். அந்தக் கூட்டத்தில், புலிவலத்திற்கு அருகிலிருக்கிற கொரடாச்சேரியில் ஜவஹர்லால் நேரு அவர்களால் தொடங்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் இல்லாத பழைய மருத்துவமனையைப் புதிதாகக் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் விடுத்திருக்கிறார்கள். எனவே, கொரடாச்சேரியும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் இருப்பதால், அவர் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை புலிவலத்திற்குப் பதிலாக கொரடாச்சேரியில் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தால், அதனை அமைத்துத் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.

திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், கொரடாச்சேரி பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அந்த மருத்துவமனை பாரதப் பிரதமராக பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் இருந்தபொழுது, அவர்களுடைய திருக்கரங்களால் துவக்கப்பட்டது.

முற்பகல் 10–40

அதுமாத்திரமல்லாமல் தேசிய நெடுஞ்சாலைப் பகுதியிலும் மாநில நெடுஞ்சாலையான கும்பகோணம்–மன்னார்குடி சாலையிலும் அமைந்துள்ள கொரடாச்சேரி பகுதியில் பேரூர் பகுதியைச் சுற்றி கருப்புக்குடி, பத்தூர், அபிவிருத்தீஸ்வரம், கரையாப்பாளையூர், ஊர்குடி, பெருமாள் அகரம் போன்ற

2022 ஏப்ரல் 12]

பல்வேறு ஊராட்சிகளை உள்ளடக்கி, 30,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் பயன்படக்கூடிய வகையில் கொரடாச்சேரியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக அதனை அமைத்துத் தர வேண்டும். எங்கள் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2016 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியைத் தந்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சொந்த மாவட்டமான திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ளடங்கிய கொரடாச்சேரி பகுதியில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அமைத்துத் தர வேண்டும். அதற்கான இடம் தயார் நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பதிவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, கொரடாச்சேரியில் மருத்துவமனை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார், திருவாரூர் மாவட்டம் மட்டும்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டம் என்று; இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழகமே மாண்புமிகு முதலமைச்சருடைய மாநிலம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உலகில் வாழும் ஒட்டுமொத்த தமிழக மக்களும் அவருடைய வழியைப் பின்பற்றி வருபவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியத்திலுள்ள மண்ணிவாக்கம் ஊராட்சியில் கிட்டத்தட்ட 20,000 மக்கள் வசிக்கின்றனர். அந்த இடத்திலிருந்து மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருந்தால், தாம்பரம் அல்லது கூடுவாஞ்சேரி அரசு மருத்துவமனைக்குத்தான் செல்ல*

வேண்டியிருக்கிறது. எனவே, மண்ணிவாக்கத்திலேயே ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலேயே சொல்லியிருக்கிறேன். ஒன்றிய அரசின் வரையறையில், 30,000 எண்ணிக்கையில் பொது மக்கள் இருக்க வேண்டும், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மற்றொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 8 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும். இவ்விரண்டும் பொருந்தி வருமானால், நிச்சயம் அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.*

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தொகுதி, எலச்சிப்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட மானத்தி, இளநகர், புத்தூர், அக்லாம்பட்டி, மருக்கலாம்பட்டி ஆகிய ஊர்களை மையமாகக் கொண்ட வேலகவுண்டம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஓரிரு நாட்களில் அங்கிருக்கிற மாவட்ட சுகாதார அலுவலர்களை அனுப்பி, ஆய்வு மேற்கொண்டு, ஏற்கெனவே கூறப்பட்ட வரையறைக்குள் வருமாயின் அதற்குரிய மேல்நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள்.*

2022 ஏப்ரல் 12]

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம். தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு இல்லாமல் இருக்கிறது. தஞ்சையைச் சுற்றியிருக்கின்ற 4, 5 மாவட்டங்களுக்கு அது அவசியமான ஒன்றாகும். அங்கிருக்கக்கூடிய இருதய நோயாளிகள், இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றால், சென்னைக்கோ அல்லது திருச்சிக்கோ செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தால், தஞ்சை அரசு மருத்துவமனைக்கு ஓர் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்பது மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு சிறப்பு மருத்துவப் பிரிவுகளையும் உள்ளடக்கியிருக்கிறது. ஏற்கெனவே அந்த மருத்துவக் கல்லூரிக்கு நான் இரு முறை ஆய்விற்குச் சென்றிருக்கிறேன். அங்கு இரு புதிய பிரிவுகள் தொடங்கப்பட வேண்டியிருக்கிறது. அடுத்து வருகின்ற மானியக் கோரிக்கையின்போது, அது சம்பந்தமாக அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, கேள்வி பதில் பகுதியில்,* century *அடித்துவிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

திருக்கோயிலைச் சீரமைத்தல்

***426—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—